

# இயேசு இணையற்றவரா?

# இயேசுவானவர் இணையற்றவரா?

# IS JESUS CHRIST UNIQUE?

சரித்திர நிகழ்வுகள் அத்தனையும் இயேசு கிறிஸ்துவையே மையமாகக் கொண்டவை. எனவேதான் நாம் சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) என்றும், கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) என்றும் பிரித்திருக்கிறோம். இவரில்லாது சரித்திரமில்லை. சொல்லப்போனால், சரித்திரமே இவரது சரிதைதான். இயேசு கிறிஸ்து ஈடு இணையற்றவர் என்பதற்கு ஆறு முக்கியக் காரணங்கள் உண்டு.

## 1. இயேசுவானவரைப்போல் பிறந்தவர் எவருமில்லை.<br>NO ONE WAS EVER BORN LIKE JESUS CHRIST.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசுவானவர் ஆசியாக் கண்டத்தில் ஒரு குழந்தையாகப் பிறந்தார். ஆனால் அவர் பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவர் எப்படிப் பிறப்பார், எங்கு பிறப்பார் என்பதெல்லாம் முன்னறிவிக்கப்பட்டிருந்தன. நீங்களும் நானும் ஒரு தந்தைக்கும் தாய்க்கும் பிறந்தவர்கள். இயேசுவானவரோ மணமாகாத ஒரு கன்னியின் வயிற்றில், ஆண் உதவியின்றிப் பிறந்தார். இது ஏன் என்பதைக் கவனியுங்கள்.

நம்மைப் படைத்தவர் கடவுளே. நமது முதல் பெற்றோர் (ஆதாம், ஏவாள்) அவரது சொல் மீறி அவரை விட்டு விலகிப்போய்விட்டனர். அதுதான் பாவம் என்பது. கடவுளுக்குப் பாவத்தின்மீதுதான் வெறுப்பு; பாவியின் மீதோ பாசந்தான்! ஆனால், இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு கிடையாது என்பது இறைச் சட்டம். மனுக்குலம் முழுவதும் பாவம் செய்துவிட்டதே, பாவமற்ற பரிசுத்த இரத்தத்திற்கு எங்கே போவது? கடவுள் ஒருவர்தான் பாவமற்ற பரிசுத்தர்; ஆனால் அவருக்கு உடலுருவம் கிடையாதே! இதற்கு ஒரே வழி **கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்.** கிறிஸ்துவின் பிறப்பில் இதுதான் நடந்தது. கடவுள் என்ற வகையில் அவருக்குத் துவக்கம் என்று எதுவும் கிடையாது. கிறிஸ்துமஸ்-க்கு முன்னதாகவே கிறிஸ்து இருக்கிறார். அவரது பிறப்பு என்பது அவரது நித்தியாநித்திய வாழ்வில் ஒரு சம்பவமேயன்றி வேறல்ல. ஆம், இயேசுவானவரைப் போல் பிறந்தவர் எவருமில்லை!



## 2. இயேசுவானவரைப்போல் வாழ்ந்தவர் எவருமில்லை.
## NO ONE EVER LIVED LIKE JESUS.

இயேசுவானவர் மனுவுரு எடுத்தபடியால், அவருக்கு எல்லா விதமான சோதனைகளும் வந்தன. என்னையும் உங்களையும்போல, வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும்,அவருக்குச் சோதனைகள் வந்தும், அவர் அச்சோதனைகளுக்கு இடங்கொடுக்காமல் **பாவமற்றவராய் வாழ்ந்தார்** என்கிறது விவிலியம் (பைபிள்). சிந்தனையில் அவர் *பாவமற்றவராயும் பூரணராயும் இருந்தார்;* சொல்லில் அவர் *பாவமற்றவராயும் பூரணராயும் இருந்தார்;* செயலில் அவர் *பாவமற்றவராயும் பூரணராயும் இருந்தார்*. தன்னை எதிர்த்தவர்களைப் பார்த்து, "என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் சுட்டிக்காட்ட முடியும்?" என்று அவர் சவாலிட்டார்!

நமது முன்னாள் குடியரசுத் தலைவர்களில் ஒருவரான மேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னையிலுள்ள கல்லூரி ஒன்றில் பேராசிரியராய்ப் பணியாற்றி வந்தார். ஒரு முறை தனது வகுப்பில் *"குரு-சீடன்"* என்ற தலைப்பில் உரையாற்றிக் கொண்டிருந்தார். மாணவன் ஒருவன் எழுந்து, "சார், நான் உங்களை எனது குருவாக வைத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான். அதற்கு அவர், "நான் ஓர் இந்து மதத் தத்துவ ஞானி; ஆனாலும், குறைவற்ற, பூரணமானதொரு குரு ஒருவர் உனக்குத் தேவையானால் அது இயேசு ஒருவரே!" என்றார். ஆம், இயேசுவானவரைப்போல் வாழ்ந்தவர் எவருமில்லை!

## 3. இயேசுவானவரைப்போல் பேசியவர், போதித்தவர் எவருமில்லை.
## NO ONE EVER SPOKE / TAUGHT LIKE JESUS.

இயேசுவானவரின் போதனைகளுக்கு உலகில் ஈடு இணையே கிடையாது. அவர் செய்த "மலைப்பிரசங்கம்" இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. திருமறையின் (பைபிள்) இரண்டாம் பகுதியின் துவக்கத்தில் இச்சொற்பொழிவை நீங்கள் வாசிக்கலாம். நமது தேசப் பிதாவாகிய மகாத்மா காந்தி சொன்னது: "இயேசுவானவரின் மலைச் சொற்பொழிவை வாசிக்கும் வரை எவரும் நிறைவடைவதில்லை!" "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உனது மறு கன்னத்தையும் காட்டு" என்பது போன்றவையெல்லாம் இச்சொற்பொழிவில்தான் காணப்படுகின்றன.

உலகிலுள்ள மதங்களுக்கும் அல்லது தத்துவ ஞானிகளுக்கும் இயேசுவானவருக்குமுள்ள வேறுபாடு மலையளவு. ஓர் அவதாரப்புருஷரிடமோ, தத்துவ ஞானியிடமோ "வாழ்வடைய வழி எது?" என்று கேட்டால், "இது வழி" அல்லது "அது வழி" என்பார். ஒரு முறை இயேசுவானவரிடம் இக்கேள்வி கேட்கப்பட்டபோது,



"இது வழி... அது வழி" என்று அவர் சொல்லாமல், ''**நானே வழி**'' என்று பதிலுரைத்தார். மட்டுமல்ல, "என் மூலமாக அல்லாமல் ஒருவரும் விண்ணகத்திற்கு வர முடியாது" என்றும் சேர்த்துச் சொன்னார். "பல வழிகளில் நானும் ஒரு வழி" என்றல்ல, ''**நானே வழி**'' என்றார். "பல சத்தியங்களில் நானும் ஒரு சத்தியம் என்றல்ல, ''**நானே சத்தியம்**'' என்றார். "பல வாழ்வு முறைகளில் நானும் ஒரு வாழ்வு முறை" என்றல்ல, ''**நானே வாழ்வு**'' என்றார். இயேசுவானவர் சத்தியத்தைத் தேடி அலையவில்லை; அவரே சத்தியமாய் வாழ்ந்தார். வாழ்வதெப்படி என்று சொல்லிக்கொடுக்க அவர் வரவில்லை; அவரே மனுக்குலத்திற்கு வாழ்வளிக்க வந்தார்.

இயேசுவானவரின் வார்த்தைகளைக் கேட்ட தச்சர்கள், விவசாயிகள், மேய்ப்பர்கள், வழக்கறிஞர்கள், செல்வந்தர், எளியவர், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், வாலிபர், நங்கையர், முதியோர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாய்ச் சொன்னது: "இந்த மனிதனைப்போல் இதுவரை எவரும் பேசியதில்லை!" எவருக்கும் அஞ்சாது சத்தியத்தைச் சத்தியமாய் அறிவித்தார். அர்த்தமற்ற சடங்குகள், பயனற்ற பாரம்பரியங்களுக்கு எதிராய்க் குரலெழுப்பினார். ஆம், இயேசுவானவரைப்போல் பேசியதும் போதித்ததும் எவருமில்லை!

## 4. இயேசுவானவரைப்போல் செயலாற்றியவர் எவருமில்லை.
## NO ONE EVER WORKED MIRACLES LIKE JESUS

மனிதன் இவ்வுலகில் ***வியாதி, பிசாசு, மரணம், இயற்கை*** ஆகிய நான்கு சக்திகளுக்கு வெகுவாய்ப் பயப்படுகிறான். இயேசுவானவர் மனுவுருவில் வந்த கடவுளானபடியால் அவரால் முடியாதது என்று எதுவுமே கிடையாது. கடவுள் என்றாலே சர்வவல்லவர் தானே! இந்த நான்கு சக்திகள் மீதும் இயேசுவானவருக்கு முழு அதிகாரமும் வல்லமையும் இருந்தன.

இயேசுவானவரிடம் வந்த எல்லாவித **நோயாளிகளையும்** அவர் சுகமாக்கினார். பார்வையற்றோருக்குப் பார்வையளித்தார். வாய் பேசாதவர்களைப் பேச வைத்தார். காது கேளாதோரைக் கேட்கச் செய்தார். முடவரை நடக்கச் செய்தார். எவரும் தொடுவதற்குத் தயங்கும் தொழுநோயாளிகளை மனதுருக்கத்துடன் தொட்டுக் குணமாக்கினார்.

***பிசாசுகள்மீது*** அவருக்கிருந்த வல்லமையை விவரிக்க முடியாது. தனது ஒரு சில வார்த்தைகளினாலேயே அவர் அசுத்த ஆவிகளைத் துரத்தினார். அவரது வார்த்தைக்கு எந்தப் பிசாசும் எதிர்த்து நிற்க முடியவில்லை. பிசாசுகள் அவருக்கு முன் நடுநடுங்கி ஓடிப்போயின. "ஏன் எங்களை வதைக்க வந்தீர்" என்று அசுத்த ஆவிகள் ஓலமிட்டன.



***மரணத்தின்மீது*** இயேசுவானவருக்கு இருந்த சக்தி அதிசயமானது. இறந்துபோன எல்லாரையும் அவர் எழுப்பிவிடவில்லை; ஏனென்றால் நாமெல்லாரும் "ஒருதரம் மரணமடைந்து பின்னர் நியாயத்தீர்ப்படையவேண்டும்" என்பது தெய்வீக நியமனம். ஆனால், மரணத்தின் மீது தனக்கு வல்லமை உண்டென்று நிரூபிப்பதற்காக இறந்துபோன ஒரு சிலருக்குத் திரும்பவும் உயிர் கொடுத்தார். சிறுவன் ஒருவனது சடலத்தைப் பாடைகட்டித் தெருவில் எடுத்துச்செல்லும்போது, ஊர்வலத்தை நிறுத்தி, அவனை எழுப்பினார். செத்து நான்கு நாட்களான பின்னர் கல்லறையிலிருந்து ஒரு வாலிபனை இயேசுவானவர் உயிரோடெழுப்பினார்.

இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்தவர் இறைவன்தானே! எனவே, படைப்பாண்டவர் என்ற ரீதியில் இயேசுவானவருக்கு ***இயற்கையின்மீது*** முழு அதிகாரம் இருந்தது. இயற்கையின் சீற்றங்களை ஒரே வார்த்தையில் அடக்கினார். தனது சீடருடன் ஒரு முறை கடற்பயணம் செய்கையில், படகு கவிழ்ந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சிய நிலையில், அவர் எழுந்து நின்று, "இரையாதே, அமைதலாயிரு" என்று காற்றுக்கும் கடலுக்கும் கட்டளை கொடுத்தார். உடனே அமைதல் உண்டாயிற்று; யாவரும் வெகுவாய் வியந்தனர். புயல்களும் வெள்ளங்களும் எவ்வளவு பாதிப்பை உண்டாக்குகின்றன என்பதை அறியாதது யார்? இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆம், இயேசுவானவரைப்போல் செயலாற்றியவர் எவருமில்லை.

## 5. இயேசுவானவரைப்போல் மரித்தவர் எவருமில்லை.
## NO ONE EVER DIED LIKE JESUS.

தான் எப்போது, எப்படி, எங்கு மரிக்கப்போகிறார் என்பதை இயேசுவானவர் முன்னமே அறிந்திருந்தார். அவர் நமக்காக, வேண்டுமென்றே, தானாக உயிர்கொடுத்தார். சொல்லப்போனால் அவர் கொலை செய்யப்படவில்லை, அவராகவே மரித்தார். "உயிரைக் கொடுக்கவும், அதைத் திரும்ப எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு" என்றார் அவர். ரோமப் பேரரசில் கொலைக் குற்றவாளிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட சிலுவை மரத்தில்தான் இயேசு மரித்தார்.

இயேசுவானவர் உங்களுக்காகவும், எனக்காகவும், உலகில் வாழ்கிற ஒவ்வொரு மனிதருக்காகவும் மரித்தார். இனிமேல் பிறக்கப்போகிறவர்களுக்காகவும் இயேசுவானவர் உயிரைக் கொடுத்துவிட்டார். பல உயரிய நோக்கங்களுக்காக இவ்வுலகில் தங்கள் உயிரையே கொடுத்துவிட்ட பலருண்டு. ஆனால் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் உயிர் கொடுத்தது இயேசுவானவர்



ஒருவரே. நாம் பாவ மன்னிப்புப் பெறும்படி இயேசுவானவர் **சிலுவையில் நமது பாவங்களையெல்லாம் சுமந்து தீர்த்தார்.** நாம் கண்ணியத்துடனும், மதிப்புடனும் வாழும்படி இயேசுவானவர் சிலுவையில் வெட்கத்தையும், பழிப்பையும் தாங்கிக்கொண்டார். நாம் ஆசீர்வாதமாக வாழும்படி இயேசுவானவர் சிலுவையில் நமக்காக சாபமே ஆகிவிட்டார்.

## 6. இயேசுவானவரைப்போல் உயிர்த்தவர் எவருமில்லை. NO ONE EVER ROSE AGAIN FROM THE DEAD LIKE JESUS

ஒருவரும் இயேசுவானவரைப்போல் உயிர்விட்டதில்லை. ஆனாலும், மரணம் அவரது வாழ்வின் முடிவல்ல; **அவர் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்துவிட்டார்.** தான் உயிரோடு எழுந்துவிட்டதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது சீடர்களுக்கு 40 நாட்கள் உறுதிப்படுத்தினார். அவர் இன்றும் உயிருடன் இருக்கிறார். அவர் உயிருடன் எழுந்திராவிட்டால் கிறிஸ்தவம் என்பதே இல்லாதிருந்திருக்கும்; அது உலகெங்கும் பரவியிருக்காது. அவர் உயிருடன் எழுந்து 40 நாட்களுக்குப் பின்னர் விண்ணகத்திற்குச் சென்றுவிட்டார். அண்ட சராசரத்தையும் படைத்தவரை எந்த ஒரு கட்டிடத்திற்குள்ளும் வைத்துக்கொள்ள முடியாது. கடவுள் ஆவியாயிருக்கிறார். நமது இதயத்தையே அவர் ஆலயமாக்குகிறார். தொழுகைத்தலங்களைக் குறித்த நமது நாட்டுப் பிரச்சனைக்கு நிவாரணம் இயேசுவானவர் ஒருவரே!

இயேசுவானவர் உயிரோடு எழுந்த பின்னர், தனது சீடர்களைப் பார்த்து, "நீங்கள் உலகமெங்கும் பரவிச் சென்று என்னைப் பற்றிய **நற்செய்தியை** எங்கும் பரப்புங்கள்" என்று பணித்தார். "எனது பெயரால் எங்குமுள்ள மனிதருக்குப் **பாவமன்னிப்பைப்** பிரகடனப்படுத்துங்கள்" என்று கூறினார். அப்படித்தான், அவரது 12 சீடர்களில் ஒருவராகிய தோமா என்பவர் இந்தியாவிற்கு வந்தார். அவரது நினைவாகத்தான் சென்னையில் "செயின்ட் தாமஸ் மவுண்ட்" என்ற இடம் உள்ளது. ஆம், கிறிஸ்துவின் நற்செய்திக்கு இந்தியாவில் 2000 ஆண்டுகளுக்கு மேல் சரித்திரம் உண்டு. அதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தான் வெள்ளையர் இந்தியாவிற்கு வந்தனர். இயேசுவானவர் மேற்கிலோ கிழக்கிலோ அல்ல, மத்திய கிழக்கில் தோன்றியவர்!

## தத்துவமா, இரட்சகரா? PHILOSOPHY OR SAVIOUR ?

குறும்புக்காரச் சிறுவனொருவன் தெருவில் அங்குமிங்கும் ஓடி, கவனமின்றி, வழியிலிருந்த குழி ஒன்றில், தண்ணீருக்குள் விழுந்து விட்டான். அவனுக்கு நீச்சல் தெரியாததால் நீருக்குள் தத்தளித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வயதானவர் அவ்வழியே



வந்தார். மிகக் கனிவோடு அவனைப் பார்த்து, "தம்பி, இனிமேல் நீ தெருவில் நடக்கும்போது மிகக் கவனமாய் நடக்க வேண்டும்" எனக் கனிவான வார்த்தைகளைக் கூறி, அந்தப் பெரியவர் கடந்துபோனார். மற்றொரு மனிதர் அவ்வழியாய் வந்தார். அவரும் அங்கே நின்று, அவனைப் பார்த்து, "அருமையான தம்பி, உன் வயதுக்கேற்ற குறும்புத்தனத்தில் இப்படி நடந்துவிட்டாய். ஆனால், நீ நீச்சல் கற்றிருக்க வேண்டும். இனிமேலாவது கற்றுக்கொள்" என்று கூறி அவரும் கடந்துபோனார். இவையெல்லாம் நல்ல ஆலோசனைகள்தான்; ஆனால் நீரில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சிறுவனுக்கு இவை ஏதும் பயனளிக்குமா? அவ்வழியே மற்றும் ஒருவர் வந்தார். இக்காட்சியைக் கண்ட அவர் தண்ணீருக்குள் குதித்து, அவனைத் தூக்கியெடுத்து, வெளியே கொண்டுவந்தார்.

எல்லா மதங்களும் மனிதனுக்கு நல்ல ஆலோசனைகளையும் தத்துவங்களையும்தான் தருகின்றன. அனால், பாவக்கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதனுக்குத் தேவை தத்துவம் அல்ல; அவனை மீட்டெடுக்க அவனுக்கு ஓர் (Saviour) ''**இரட்சகர்**'' தேவை. அவர்தான் இயேசு கிறிஸ்து!

நண்பரே, இது ஒரு மதப் பிரச்சாரமல்ல. உலகிலுள்ள எந்த மதமும், கிறிஸ்தவ மதமும் கூட, ஒருவரையும் பாவத்திலிருந்து மீட்டெடுக்க முடியாது. பாவிகளாகிய நமக்குத் தேவை ஓர் இரட்சகரே!

உயிரோடு எழுந்து விண்ணகமேறிய இயேசுவானவர், "நான் திரும்பவும் வருவேன்" என்று சொல்லிச் சென்றார். "என்னிடம் வாருங்கள்" என்று யாவரையும் அன்புடன் இயேசு அழைக்கிறார். அவருக்குமுன் நல்லவர், தீயவர், உயர்குலத்தவர், தாழ்ந்தகுலத்தவர் என்ற வேறுபாடே கிடையாது; எல்லாரும் ஒன்றுதான்; எல்லா மனிதரும் பாவ மன்னிப்படைந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள இயேசு ஆவலாயிருக்கிறார். இன்று அவர் நமக்கு முன் ''**இரட்சகராய்**'' நிற்கிறார்; அவர் மறுபடியும் இவ்வுலகிற்குத் திரும்பி வரும்போது அவர் நமக்குமுன் ''**நீதிபதியாய்**'' நிற்பார். நண்பரே, இங்கு தெரிவு செய்தல் தனிப்பட்ட முறையில் உங்களுடையதே.

## உங்களுக்கு இறையருள்!

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய மூன்று காரியங்களை உங்களுக்கு எளிதாக விளக்குகிறோம்:

முதலாவது, ''**நான் ஒரு பாவி**'' என்று கடவுளுக்குமுன் ஒத்துக் கொள்ளுங்கள். நமது மார்க்கச் சடங்குகள் மற்றும் புண்ணியச்செயல்கள் எதுவும் பூரணப் பரிசுத்தராகிய கடவுளைத் திருப்திப்படுத்த முடியாது.

இரண்டாவது, ''***கிறிஸ்து எனது பாவங்களுக்காகவே உயிர்கொடுத்து, மூன்றாம் நாள் உயிருடன் எழுந்தார்***'' என்று நம்புங்கள். "அவரே எனது பாவப் பரிகாரி" என்று சொல்லுங்கள்.



மூன்றாவது, கீழ்க்கண்டவாறு கடவுளிடம் பிரார்த்தியுங்கள்:

*"கடவுளே, நான் ஒரு பாவி, எனது பாவங்களுக்காகவே இயேசுவானவர் உயிர்கொடுத்தார் என்றும், மூன்றாம் நாள் உயிரோடு எழுந்துவிட்டார் என்றும் எனது இருதயத்தில் நம்புகிறேன். எனது பாவங்களை மன்னித்து, என்னை உமது பிள்ளையாக மாற்றும். இயேசுவின் பெயரால் இதைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியே ஆகட்டும்!"*

இப்பொழுது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நீங்கள் கடவுளது பிள்ளையாக மாறுகிறீர்கள். உங்கள் இருதயத்தில பாவ மன்னிப்பின் நிச்சயமும், இரட்சிப்பின் மகிழ்ச்சியும் வழிந்தோடும். இது ஒரு மதமாற்றமல்ல, மனமாற்றம்!

இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரது போதனைகளைப் பற்றியும் இன்னும் கூடுதலாக அறிந்துகொள்ள, ஒரு கிறிஸ்தவ புத்தகக் கடையிலிருந்தோ, ஒரு கிறிஸ்தவ நண்பரிடமிருந்தோ, **திருவிவிலியம்** (பைபிள்) ஒன்றை வாங்கி வாசியுங்கள். அல்லது கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஒரு பைபிள் பகுதி அனுப்பி வைக்கிறோம்.

இறையருள் உங்கள்மீதும், உங்கள் குடும்பத்தின் மீதும் நிறைவாயிருக்கட்டும் என்று உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

அவராலேயன்றி (இயேசு) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை ; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசு) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4:12

இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான் 14:6 (நன்றி : சகோதரர். ஸ்டான்லி)

---


# சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்

## உங்களை அன்புடன் வரவேற்கிறது

**ஞாயிறு இன்னிசை துதி ஆராதனைகள்**

| | | |
|---|---|---|
| தமிழ் ஆராதனை | : | காலை 7.00 மணி, 11.00 மணி |
| ஆங்கில ஆராதனை | : | காலை 9.00 மணி |
| மாலை ஆராதனை | : | மாலை 6.30 மணி |

**@**

**ஜென்னி பிளாசா**

**5, பாரதியார் சாலை, கண்டோன்மெண்ட்**

**திருச்சி – 1.**

**Rev. Dr. ஜெரி டேனியல் – 94434 15484**


